திருக்கோவில்

# அக்கிராசப் பிள்ளையார்

## கும்பாபிஷேக வெளியீடு



***பாடல் வரிகள்***

இரா.தெய்வராஜன்

கோவிலூர் செல்வராஜன்

எஸ்.பி.கனகசபாபதி

**இசை**

ராஜ்குமார்

சதீஸ்

***இணைத் தயாரிப்பு***

இரா.தெய்வராஜன் &

ஆலய தர்மகர்த்தா சபை

## 01. முந்திப் பிறந்தவனே

முந்திப் பிறந்தவனே தொந்திக் கணபதியே
ஓம் என்னும் பிரணவப் பொருளே
நந்தி மகன் என்றும் ஞானக்
- கொழுந்தென்றும்
ஞானிகள் தேடிய மணியே

வேழமுகத்தவனே ஒற்றைக் கொம்பனே
வேத முதல்வனே பாலச்சந்ரனே
விக்னேஸ்வரன் பெயர் சொல்லுவோம்
ஏரம்பனின் நாமம் பாடுவோம்

நாமங்களைப் பாராயணம் செய்து
- மகிழ்வோம்
நல்லவைகள் நாடிவரும் வாழ்வை
- வெல்லுவோம்

அறு கெருக்குமாலையை அணிந்து
- கொண்டாயோ
வறு கடலை சுண்டலை ஏற்று விட்டாயோ
கரும்பும் இளநீரும் அருந்தி விட்டாயோ
விரும்பியதைத் தந்தோம் வேதனை
- தீர்ப்பாயோ

நாமங்களைப் பாராயணம் செய்து
- மகிழ்வோம்
நல்லவைகள் நாடிவரும் வாழ்வை
- வெல்லுவோம்

உன்னை மறந்து சிவன் சென்றதனாலே
உடைந்தது ரதத்தின் அச்சாணியே
உன்னை நினையாது கடைந்ததனாலே
தேவாமிர்தத்திலும் நஞ்சு கலந்ததே

நாமங்களைப் பாராயணம் செய்து
- மகிழ்வோம்
நல்லவைகள் நாடிவரும் வாழ்வை
- வெல்லுவோம்

**இரா.தெய்வராஜன்**
**திருக்கோவில்.**

## ௦௨. திருக்கோவில் பதியில் வாழும் கணபதி

திருக்கோவில் பதியில் வாழும் கணபதி - எங்கள்
ஊருக்கெல்லாம் உறுதுணையாம் குணநிதி
ஆதி சிவசக்தி தந்த கணபதி - பெரும்
அல்லல் நீக்கி அரவணைப்பாய் அருள்நிதி

வேழமுகனே வேதமும் நீயே
ஆதிமுதலே அடிநாதமும் நீயே

முருகனின் கோவில்ச் சொத்து ஆவணம் - உன்
முன்னாலே எழுதப்பட்ட சாசனம்
பத்திரமாய் இன்னும் இங்கு உள்ளது - அதை
பாதுகாக்கும் பொறுப்பு இன்னும் உன்னது

வேழமுகனே வேதமும் நீயே
ஆதிமுதலே அடிநாதமும் நீயே

திருமுறை நம்பி வைத்த படையலை -
துதிக்
கையினாலே ஏற்று உண்ட கரிமுகா
கோணேசர் லிங்கம் அங்கு நிலைத்திட
ராவணேசனுடன் ஊடல் கொண்ட கஜமுகா

வேழமுகனே வேதமும் நீயே
ஆதிமுதலே அடிநாதமும் நீயே

சாதி சமத பாகுபாடு இன்றியே - என்றும்
சமத்துவமுமே நிலவுகின்ற கோவிலே
பெண்களும் பூஜை செய்த சந்நிதி -இதை
போற்றிப் பாடக் கிடைத்திடுமே நிம்மதி

**இரா.தெய்வராஜன்**
**திருக்கோவில்.**

## 03. உனைப் பாட


உனைப்பாட உனைப்பாட ஒருராகம்
- உருவாகுதே
உனைவேண்டி உனைவேண்டி எம்
- வாழ்வில் நலம் சேர்ந்ததே
கணநாதனே சிவமைந்தனே சிவகாமியின்
- அருஞ் செல்வமே

ஐங்கரன் நீயே ஆபத்பாந்தவன் நீயே
சங்கரனும் வணங்குகின்ற சுவாமியும் நீயே
மூத்தவன் நீயே முழுமுதல் நீயே
அம்மை அப்பன் உலகமென்று
- சொன்னவன் நீயே

அத்திமுகனே எங்கள் ஆதிமுதலே
முத்தமிழும் தழைக்கவந்த தத்துவம் நீயே
வித்தகன் நீயே வினாயகன் நீயே
சித்திபெற புத்தி தரும் அற்புதன் நீயே

சாந்தமும் நீயே என்றும் சமரசம் நீயே
சந்ததமும் எமக்கருளும் தெய்வமும் நீயே
வேழமுகனே வேதமும் நீயே
அக்கிராசப் பிள்ளையாராய் அருள்பவன்
- நீயே

**கோவிஹர் செல்வராஜன்**
**நோர்வே**



## ௦௪. அத்திமுகக் கணபதி

அத்திமுகக் கணபதியே அக்கிராசப்
- பிள்ளையாரே
அழகான திருக்கோவில் ஐங்கரனே
வானாகப் பரந்தவனே வள்ளலாக
- நிற்பவனே
வள்ளிக் கிழங்குதனை உண்பவனே
கோனாகப் பிறந்து வந்தாய் கோமகனே
குமரனுக்கு மூத்தவனே ஒற்றைக்
- கொம்பனே

உமையாளின் உயர்ந்த பிள்ளை
- உண்மைகளை உணர்ந்த பிள்ளை
இமையாகக் காப்பவனும் நீரைய்யா
தந்தை தாயை உலகம் என்றாய்
- தம்பி வாழ வழியும் செய்தாய்
விந்தைமிகு வினாயகனும் நீரைய்யா
ஆழி அலை மீண்டும் வேண்டாம்
- ஆயுதப் போர் என்றும் வேண்டாம்
அமைதி வாழ்வு ஒன்றே போதும்
- ஆனைமுகா

தென்னை இளநீரும் தெவிட்டாத பால்
- பழமும்
தேனும் பாகும் கற்கண்டும் தந்தோம் ஐயா
உன்னையே தஞ்சம் என்று வருவோரின்
- வேண்டுதல்கள்
கண்ணெதிரே நிறைவேறக் கண்டோம் ஐயா
நாடுபோற்றும் மனிதர்களாக நல்லொழுக்க
- சீலர்கள் ஆக
வாழ்வாங்கு வாழ வைப்பாய் வேழமுகா

**எஸ்.பி.கனகசபாபதி**
**கனடா**

## ০5. தித்திக்கும் திருக்கோவில்

தித்திக்கும் திருக்கோவில் அக்கிராசா
தீராத சங்கடங்கள் தீர்க்கும் நேசா

அக்கிராசா அக்கிராசா
அக்கிராசா எங்கள் அக்கிராசா

ஓங்கார நாயகனே ஓடிவாராய்
ஒய்யார நடை நடந்து தேடி வாராய்
ஆங்காரம் அகற்றி உந்தன் அடியவரை
ஆட்கொள்ள எந்நாளும் ஆடிவாராய்

அக்கிராசா அக்கிராசா
அக்கிராசா எங்கள் அக்கிராசா

தென்னை இளங்கீற்றிடையே வாழுகின்றாய்
திருக்கோவில் அக்கிராசப் பிள்ளையாரே
உனைநாடி ஓடிவரும் பக்தர்களின்
வினை தீர்க்கக் காத்துநிற்கும் பிள்ளையாரே

அக்கிராசா அக்கிராசா
அக்கிராசா எங்கள் அக்கிராசா

வாரண வதனனே நீ வரமருள்வாய்
வாங்காமலே வழங்கும் வள்ளல் நீயே
காரணக் கடவுள் நீயே கணபதியே
கனகசபாபதியின் தலைமகனே

அக்கிராசா அக்கிராசா
அக்கிராசா எங்கள் அக்கிராசா

ஆதியே சோதியே அக்கிராசனே
ஆலை அரசை நிழல் உவந்தவனே
நீதியால் இவ்வுலகம் நிம்மதி கொள்ள
நித்தமும் காத்தருளும் விக்னநாசா

அக்கிராசா அக்கிராசா
அக்கிராசா எங்கள் அக்கிராசா

**எஸ்.பி.கனகசபாபதி**
**கனடா**

## 06. அழகு திருக்கோவில்

அழகு திருக்கோவிலுறை ஆறுமுகன்
- சோதரனே
பழம் ஏந்தும் கையோனே கஜமுகா
பார்வதியின் பாலனே லம்போதரா
அக்கிராசப் பிள்ளையாரே அருளை
- அள்ளித் தருபவரே
விக்கினங்கள் நீக்கிடு வினாயகா
வேதனையை விலக்கிடு விக்கினேஸ்வரா

சாதிமத பேதமின்றி சித்திரையில்
- கஞ்சிவைப்போம்
சோதி வடிவே விடிவைத் தாருமையா
திருக்கோவில் ஆவணங்கள் வரலாற்றுச்
- சாசனங்கள்
உருவாகச் சாட்சியான ஆனைமுகா
எந்த யுத்தம் வந்தால் என்ன வங்கக்
- கடல் பாய்ந்தால் என்ன
பேரழிவைத் தாங்க வைத்தாய்
- அத்திமுகா
வேதனைகள் தணிய வைத்தாய்
- வேழமுகா

கந்தனுடன் வள்ளியை நீ கானகத்தில்
- சேர்த்து வைத்தாய்
நொந்தவரின் மனக் குறையைத் தீரும்
- ஐயா
கயமுகா சூரனது ஆணவம் அடங்க
- வைத்தாய்
கயவர்கள் தம்தவறை உணர வைப்பாய்
சோதனைகள் வந்தால் என்ன சோர்ந்து
- விடமாட்டோம் ஐயா
சொந்த மண்ணில் வாழ வழி காட்டும்
- ஐயா
சொந்த பந்தம் சிதறிடாமல் சேர்த்திடையா.

**இரா.தெய்வராஜன்**
**திருக்கோவில்.**

## 07. அக்கிராசப் பிள்ளையாரே

அக்கிராசப் பிள்ளையாரே அற்புதங்கள்
- செய்பவரே
விக்கினங்கள் தீர்ப்பவரே ஓங்கார
- கணபதியே
வேண்டும் வரம் தருவதற்கு வாநீ
- கணேசா
வேண்டும் வரம் தருவதற்கு வாநீ

சித்திரையில் கஞ்சி வைப்போம்
- பக்குவமாய் அதைப் படைப்போம்
அத்திமுகன் அழகைக் காண கச்சிதமாய்
- அலங்கரிப்போம் - சுவாமி
சித்தி அருள் பிள்ளையாரே சுவாமி
- என்றும்
சித்தி அருள் பிள்ளையாரே சுவாமி

புண்ணியத்தை வரவு வைத்து
- பாவங்களைக் கணக்கு வைத்து
மறுபிறப்பில் அனுபவிக்கும் தலைவிதியை
எழுதிவிடும் - சித்ர

புத்திரனார் கதை நிகழும் கோவில் -
சித்ர
புத்திரனார் கதை நிகழும் கோவில்

நல்லதையே பார்த்திடுவோம்
- நல்லதையே கேட்டிடுவோம்
நல்லதையே பேசிடுவோம் நல்லதையே
- செய்திடுவோம் - என்றும்
நல்லவராய் நடந்திடுவோம் நாங்கள் -
இனி
நல்லவராய் நடந்திடுவோம் நாங்கள்

**இரா.தெய்வராஜன்**
**திருக்கோவில்.**

## 08. கற்சிலை ஆனாலும்

கற்சிலை ஆனாலும் கற்பகம் நீதானே
நற்றவம் செய்தோமோ உனை நித்தம்
- பாடிடவே
ஆதிசிவன் அம்பிகையின் ஆனைமுகா
ஆடிப் பாடித் துதித்தோமே அருள்வாயப்பா

ஐந்துகரத்தோனே விக்னேஸ்வரா
- வேழமுகத்தோனே விநாயகா
அக்கிராசப் பிள்ளையாராக அமர்ந்தாயே
- நீயே கணநாதா

பக்திக்கு வித்தானாய் பாடலின்
- பொருளானாய்
பாரதம் எழுதிடவே வியாசரின்
- துணையானாய்
எத்திக்கும் இருக்கின்றாய் முத்திக்கு
- வழிசொன்னாய்
தித்திக்கும் திருக்கோவில் தேடியே நீ
- வந்தாய்

ஐந்துகரத்தோனே விக்னேஸ்வரா
- வேழமுகத்தோனே விநாயகா
அக்கிராசப் பிள்ளையாராக அமர்ந்தாயே
- நீயே கணநாதா

சக்தியின் மகனானாய் சதுர்த்தியில்
- உருவானாய்
முதல்முதல் வணங்கிடவே மூத்தவன்
- நீயானாய்
விக்கினங்கள் தீர்த்திடுவாய் வினைகளைப்
- போக்கிடுவாய்
எத்தனை துயர்வரினும் எங்களைக்
- காத்திடுவாய்

ஐந்துகரத்தோனே விக்னேஸ்வரா
- வேழமுகத்தோனே விநாயகா
அக்கிராசப் பிள்ளையாராக அமர்ந்தாயே
- நீயே கணநாதா

**கோவிஹர். செல்வராஜன்**
**நோர்வே**

## 09. ஓம் என்னும் வடிவு

ஓம் என்னும் வடிவான நாயகா - அன்னை
உமையவளின் பாலனே விக்கினேஸ்வரா
பிள்ளையாருக்குத் திருநாளாம் - சித்ரை
பௌர்ணமி நாளில் பெருநாளாம்
பெருநாளாம் திருநாளாம் அருள்நாளாம்
தாயினும் பரிவு கொண்ட பிள்ளை -
மூன்று
தமிழை ஈந்த அக்கிராசப்பிள்ளை
பெருநாளாம் திருநாளாம் அருள்நாளாம்

தாய் தந்தை உலகம் என்றே
- மாங்கனியை வென்றெடுத்தாய்
காகமென உருவெடுத்தே காவிரியை
- வரவழைத்தாய்
பாரதத்தை முடிப்பதற்கே ஒரு தந்தம் நீ
- ஒடித்தாய்
ஆதிசிவன் ரதம் உடைத்தே முதல்
- வணங்கும் பேறு பெற்றாய்
ஔவையாரைக் கைலாயம் சேரத்தவனே
ஐங்கரனே பெருங் கருணை அருள்நிதியே
பெருநாளாம் திருநாளும் அருள்நாளாம்

கந்தனுக்கு ஆதரவாய் களிறாகித்
- துணைபுரிந்தாய்
எந்தனுக்கு ஏதுமென்றால்
- உறுதுணையாய் நீ வருவாய்
பொய்ச்சாட்சி சொன்னதனால் திருமாலும்
- சாபம் பெற்றான்
சாட்சி இன்றி இனம் அழித்த ஈனர்களை
- என்ன செய்வாய்
அனைவரையும் அரவணைக்கும்
- கணபதியே
ஆறுமுகன் சோதரனே குணநிதியே
பெருநாளாம் திருநாளாம் அருள்நாளாம்

இரா.தெய்வராஜன்
திருக்கோவில்.

## 10. பிள்ளையார் கதை

பிள்ளையாரு கதை கேட்க வாங்க -
கேட்டு
வெள்ளை உள்ளம் படைத்தவராய்ப்
போங்க
வேண்டியதை அவர் தருவார் வாங்க -
வந்து
வேதனையை விரட்டிடலாம் நீங்க -
உங்க
வேதனையை விரட்டிடலாம் நீங்க

ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்

மந்திர கிரியினிலே ராசம்மா நகரினிலே
அந்தணர் மரபினிலே வாழ்ந்த
- தம்பதியாம்
குழந்தை வரம் கேட்டு நெடுநாள்
- தவமிருக்க
இரங்கிய மாதுமையாள் மகளாய்
- அவதரித்தார்

வளர்ந்ததுமே பரமசிவன் வருவார் -
அவளை
வதுவை செய்து உடன் அழைத்துச்
- செல்வார்

ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்

ஆதிசிவன் வந்தார் உமையை மணஞ்
- செய்தார்
அகலும் வழியினிலே பிடி களிறைக்
- கண்டார்
அவை போல் இருவருமே இனிதாய்
- இணைந்திருந்தார்
ஆனை முகக் குழந்தை வரவால்
- மகிழ்ந்திருந்தார்
ஆலை மர அடி நிழலில் இருத்தி -
அவனை
அரவணைத்து வாழ்த்தி அவர் சென்றார்

ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்

அந்தணர் சிறந்திடவும் ஆனினம்
- பெருகிடவும்
அறம் பல ஓங்கிடவும் ஆணவம்
- அடங்கிடவும்
அகலிகை அந்நாளில் கணவனைச்
- சேர்ந்திடவும்
தமயந்தியும் நளனும் மறுபடி கூடிடவும்
அனைத்துமே பிள்ளையாரின் மகிமை -
அவரை
முன்னிறுத்தி வாழ்வதுவே பெருமை

ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்

**இரா.தெய்வராஜன்**
**திருக்கோவில்.**


## 11. பிள்ளையாரின் பெயர் சொன்னாலே

பிள்ளையாரின் பெயர் சொன்னாலே
- பெருமைகள் சேரும்
உள்ளத்திலே அவர் நிறைந்தாலே எம் -
ஊழ்வினை மாறும்
நாமங்களைச் சொல்லி வந்தாலே
- நன்மைகள் ஊறும்
காமகுரோத மோகம் எல்லாம் எம்மை
- விட்டு ஓடிப் போகும்

ஆறுமுகன் அண்ணன் அக்கிராசப்பிள்ளை
அவரின் அருளாலே கேட்பது கிடைக்கும்
வேறுயாரும் இல்லை எங்களுக்கு என்றும்
வேழமுகன் நீதான் துணையாய் வரணும்
சங்கடங்கள் எம்மைவிட்டு ஓடிஒதுங்கும்
சாந்தியும் நிம்மதியும் தேடி நெருங்கும்
ஐங்கரனே துணை நமக்கு - என்றும்
சஞ்சலமே இல்லை எமக்கு

அத்திமுகன் நாமம் நித்தமும்
- சொன்னாலே
சித்தி எமைத் தேடிவரும் அற்புதம்தானே
வித்தைகளைச் செய்தே விக்கினங்கள்
- நீக்கும்
மூத்தவனே முழுமுதலே பாலச்சந்ரனே
அறுகாரம் சூட்டி உன்னை அழகு
- பார்க்கின்றோம்
அப்பம் அவல் பொரிகடலை படையல்
- வைக்கின்றோம்
அத்தனையும் அறிந்தவன் நீயே - எம்மை
ஆபத்திலும் அரவணைப்பாயே

இரா.தெய்வராஜன்
திருக்கோவில்.



# நன்றி

## பாடியவர்கள்

1. முந்திப் பிறந்தவனே
   - அருள்ஜோதி, தெய்வராஜன்
2. திருக்கோவில் பதி
   - சபேசன்
3. உனைப் பாட
   - ஹேமா, மயூரி
4. அத்தி முகம்
   - உஜேனி, ஹேமா
5. தித்திக்கும்
   - சயோமி, கோவிலூர்
6. அழகு திருக்கோவில்
   - ராஜ்குமார், ஹேமா
7. அக்கிராசப்பிள்ளை
   - தெய்வராஜன்
8. கற்சிலை ஆனாலும்
   - மயூரி, தெய்வராஜன்
9. ஓம் என்னும்
   - அருள்ஜோதி
10. பிள்ளையார் கதை
    - மயூரி, ஹேமா, தெய்வராஜன்
11. பிள்ளையார் பெயர்
    - சித்தீசன்